# இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை–34.

பெறுநர்

அனைத்து இணை ஆணையர்கள்,
அனைத்து உதவி ஆணையர்கள்,
இந்து சமய அறநிலையத்துறை.

**ந.க.எண். 1607 / 2019 / எம்3 நாள் 17.09.2021**

அய்யா / அம்மையீர்,

பொருள்: இந்து சமய அறநிலையத்துறை – திருக்கோயில் சொத்துக்களை முறைப்படுத்தும் பணியினை மேற்கொள்ளும் ஓய்வு பெற்ற வருவாய்த்துறை அலுவலர்களுக்கு தொகுப்பூதியம் / தலஆய்வு பயணப்படி தொகை ஆகியன நிர்ணயம் செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக

பார்வை: இவ்வலுவலக ந.கஎண்.1607/2019 எம்3 நாள் 22.01.2019

---------

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமாக நிலங்களை முறைப்படுத்திடும் பணிக்காக இணை ஆணையர் மண்டலந்தோறும், ஓய்வு பெற்ற வருவாய்த்துறை அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு இப்பணி நடைபெற்று வருகிறது. எனவே, ஆண்டிற்கு ஒருமுறை இவ்வலுவலர்களுக்கு பணி நீட்டிப்பும் மற்றும் இணை ஆணையர் மண்டலங்களில் இப்பணிக்காக நிரப்பப்படாமல் உள்ள பணியிடங்கள் / பணியிலிருந்து விலகியதால் ஏற்படும் காலியிடங்களுக்கு மாவட்டந்தோறும் ஓய்வு பெற்ற அலுவலர்கள் அவ்வப்போது விண்ணப்பிக்கப்படும்போது பணி நியமனம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், திருக்கோயில்களுக்கென தனியாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஓய்வு பெற்ற வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், துணை ஆய்வாளர் (நிலஅளவை)

Verified RealEstate

கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களுக்கு தொகுப்பூதியத்தில் பணியாற்றிட இவ்வலுவலகத்திற்கு சார்நிலை அலுவலர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள பரிந்துரைகளின்படி தொடர்ந்து பணியாற்றிட உத்தரவிடப்பட்டு வருகிறது.

திருக்கோயில் நிலங்களை முறைப்படுத்தும் பணியின் முக்கியத்துவத்தை கருதியும் மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புகளில் வழங்கப்பட்டுள்ள நிலங்கள் தொடர்பான அனைத்து அம்சங்களையும் நிறைவேற்றிடும் பொருட்டும் ஓய்வு பெற்ற வருவாய்த்துறை அலுவலர்களின் பணியானது இத்துறையை பொறுத்தவரை இன்றியமையாததாக உள்ளது.

எனவே, திருக்கோயில் நிலங்களை முறைப்படுத்தும் பணி தொடர்பாக 08.01.2019-ல் உத்தரவிடப்பட்ட பொதுவான நடைமுறையினை திருத்தி அமைத்து கீழ்க்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது.

1) திருக்கோயில் நிலங்களை முறைப்படுத்தும் பணிக்கு ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு ஒரு ஓய்வு பெற்ற துணை ஆட்சியரும், ஒரு உதவி ஆணையர் பிரிவிற்கு ஒரு ஓய்வு பெற்ற வட்டாட்சியரும், ஒரு ஓய்வு பெற்ற நிலஅளவையரும், ஒரு ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலரும் ஆணையரின் அனுமதி பெற்று பணி நியமனம் / பணி நீட்டிப்பு செய்யப்பட வேண்டும்.

2) மேலும், தற்பொழுது நடைமுறையில் உள்ளது போன்றே வசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து தொகுப்பூதியம் மற்றும் இதரபடிகளை பெற்று அளிக்க உத்தரவு பிறப்பிக்கலாம்.

3) ஓய்வு பெற்ற வட்டாட்சியர்கள் கிடைக்காதபோது அப்பதவியை ஓய்வு பெற்ற துணை வட்டாட்சியர் அல்லது ஓய்வு பெற்ற வருவாய் ஆய்வாளர் அல்லது ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர்களை கொண்டு பணிபுரிய அனுமதிக்கலாம்.

4) இதேபோன்று ஓய்வு பெற்ற நிலஅளவையர் பதவியினை ஏதேனும் ஒரு நிலையில் ஓய்வு பெற்ற நிலஅளவையர் பதவியைக் கொண்டு பணிபுரிய அனுமதிக்கலாம்.

Verified @ RealEstate™

5) திருக்கோயில் நிலங்கள் முறைப்படுத்தும் பணிக்காக இணை ஆணையர் மண்டலந்தோறும் நியமிக்கப்பட்டுள்ள ஓய்வு பெற்ற வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் குறித்து அவர்களால் சமர்ப்பிக்கப்படும் நாட்குறிப்பு மற்றும் மாதாந்திர பணி முன்னேற்றம் குறித்து மண்டல இணை ஆணையரால் சீராய்வு செய்யப்பட்டு இவ்வலுவலகத்திற்கு மாதந்தோறும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6) ஒவ்வொரு உதவி ஆணையர் மண்டலங்களிலும் சராசரியாக 1400 திருக்கோயில்கள் உள்ள நிலையில், அதிக அளவிலான நிலங்களைக் கொண்ட திருக்கோயில்களுக்கு மேற்கண்டவாறு இணை ஆணையர் மண்டலங்களில் நியமனம் செய்யப்படும் ஓய்வு பெற்ற வருவாய்த்துறை அலுவலரைக் கொண்டு பணியினை முடிக்க இயலாத நிலை ஏற்படும். எனவே, ஏற்கனவே இருந்த நடைமுறைகளின்படி தேவைப்படும் திருக்கோயில்களுக்கு ஆணையர் அனுமதி பெற்று ஓய்வு பெற்ற வருவாய்த்துறை அலுவலர்களை பணி நியமனம் செய்ய / பணி நீட்டிப்பு செய்ய அனுமதிக்கலாம்.

7) ஓய்வு பெற்ற வருவாய்த்துறை அலுவலர்களது பணிகள் முழுமையும் கண்காணித்திடவும், ஆவணப்படுத்திடவும், ஒருங்கிணைந்த திருக்கோயில் மேலாண்மை அமைப்பில் முழுமையாக பதிவேற்றம் செய்யும் வகையில் ஒவ்வொரு இணை ஆணையர் மண்டலத்திற்கும் கணினி இயக்குபவர் ஒருவரை அந்தந்த இணை ஆணையர்களே முடிவெடுத்து தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் பணி தேவை ஏற்படும் காலத்திற்கு மட்டும் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள உத்தரவு வழங்கிக் கொள்ளலாம்.

8) திருக்கோயில் நிலங்களை முறைப்படுத்தும் பணிக்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் அந்தந்த மண்டலத்தில் உள்ள நிதிவசதிமிக்க திருக்கோயில் மூலம் மண்டலத்திற்கு கணினி கொள்முதல் செய்து கொள்ள அந்தந்த இணை ஆணையர்களே முடிவெடுத்துக் கொள்ளலாம்.

9) மேலும், ஓய்வு பெற்ற வருவாய்த்துறை மற்றும் நிலஅளவைத்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதியம்

Verified RealEstate

கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்து 01.09.2021 முதல் உத்தர-விடப்படுகிறது.

10) தற்போது ஓய்வு பெற்ற வருவாய்த்துறை மற்றும் நிலஅளவைத்துறை அலுவலர்களுக்கு ஊதியம் வழங்கி வரும் திருக்கோயில்கள் மூலம் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி மாத ஊதியமானது 01.09.2021 முதல் திருத்தி அமைத்து வழங்கிட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | அலுவலர் விவரம் | தற்போது வழங்கப்படவுள்ள | |
|---|---|---|---|
| | | ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. | ஸ்தல ஆய்வு பயணப்படி |
| 1) | துணை ஆட்சியர் | 30,000/- | நாள் ஒன்றுக்கு ரூ.150/- வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.1800/- மிகாமல் |
| 2) | வட்டாட்சியர் | 25,000/- | |
| 3) | துணை வட்டாட்சியர் | 17,000/- | |
| 4) | வருவாய் ஆய்வாளர் | 15,000/- | |
| 5) | கிராம நிர்வாக அலுவலர் | 12,000/- | |
| 6) | நிலஅளவர் | 15,000/- | |
| 7) | குறுவட்ட நிலஅளவையர் | 12,000/- | |
| 8) | சார் ஆய்வாளர் | 14,000/- | |
| 9) | துணை ஆய்வாளர் | 15,000/- | |
| 10) | ஆய்வாளர் | 18,000/- | |

ஒம்./-ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப./

20.9.2021
கண்காணிப்பாளர்

நகல் :

20.9.2021

1) இணை ஆணையர் / துணை ஆணையர் / உதவி ஆணையர் நிலை செயல் அலுவலர்கள்.
2) ஓய்வு பெற்ற வருவாய்த்துறை மற்றும் நிலஅளவைத்துறை அலுவலர்கள்
3) ஊதியம் வழங்கும் திருக்கோயில் செயல் அலுவலர்கள்
4) எம்3 இருப்பு கோப்பு
5) மிகை.

Verified RealEstate